# அடுத்த 8 அமர்வு நாட்களில் அர்ச்சுனாவின் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்குத் தடை விதிப்பு

## சபாநாயகர் இன்று அதிரடி உத்தரவு



யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவினால் நாடாளுமன்றத்தில் அடுத்த 8 அமர்வுநாட்களில்முன்வைக்கப்படும் கருத்துக்கள் மற்றும் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்குச் சபாநாயகரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

“நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சில உரைகள், கருத் துகள் தேசிய நல்லிணக்கத்துக்கும், இன சகவாழ்வுக்கும் பாதிப்பை 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 05 புதன்கிழமை 19.03.2025 கதிர் 157

# சரணடைந்த தென்னக்கோனுக்கு நாளை வரை விளக்கமறியலில்

## மாத்தறை நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 19

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து தேசபந்து தென்னக்கோன் தலைமறைவானார். அவரைக் கைது செய்வதற்குப் பல பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு தேடுதல் வேட்டை இடம்பெற்று வந்தது.

இதற்கிடையில் தன்னைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி தேசபந்து தென்னக்கோன் சார்பில், அவரது சட்டத்தரணியால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் 2 ➤



# தேசபந்துவின் வீட்டிலிருந்து 1009 மதுபானப் போத்தல்கள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 19

முன்னால பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வீட்டில் இருந்து 1009 மதுபானப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்தத் தகவலை வெளியிட்டார்.

795 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களும், 214 வைன் போத்தல்களுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னக்கோனின் வீட்டை சி.ஐ.டியினர் நேற்று சோதனைக்கு உட்படுத்தியபோது இரண்டு கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# யாழில் தமிழரசுக் கட்சி வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று மாலை தாக்கல் செய்தது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளில் 5 சபைகளுக்கான வேட்புமனுக்களை மாத்திரம் தமிழரசுக் கட்சி இன்று தாக்கல் செய்தது.



# மஹிந்தவின் ரிட் மனு நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்பு அதிகாரிகளைக் குறைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணையின்றி உயர் நீதிமன்றம் இன்று நிராகரித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த அதிகாரிகளில் 60 பேரை அண்மையில் அரசு மீளப்பெற்றிருந்தது.




இந்நிலையில், இதற்கு எதிரான மனுவில் உள்ள விவரங்களை இன்று நீண்ட நேரம் ஆய்வு செய்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகம் நியமனம்!

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக ஆர்.பி.எச். பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, நாளை (20) முதல் அமுலுக்கு வரும் வகையில் இறைவரி திணைக்களத்தின் 39வது ஆணையாளர் நாயகமாக அவர் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் அமைச்சர் நாடாளுமன்றில் விசேட உரை

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் சொத்துக்களை பறிமுதல் செய்தமை தொடர்பாக நீதிமன்றத்திற்கு சாட்சியங்களை வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புக் குழு இன்று (19) மாத்தறை நீதவான் நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும் இதற்கிடையில் தேசபந்து தென்னகோன் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் குறித்த சம்பவம் தொடர்பாக விசேட அறிக்கையை வெளியிட்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், முன்னாள் பொலிஸ்மா தேசபந்து தென்னகோனின் வீட்டில் இருந்து 795 மதுபான போத்தல்கள், 214 வயின் மதுபான போத்தல்கள், ஒரு கைத்துப்பாக்கி மற்றும் இரு ஐ போன்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட தொலைபேசிகள் மூலம் அநேக தகவல்கள் வெளிப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## மாத்தறை வெலிகம பகுதியில் துப்பாக்கிச் சூடு

மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 8 பேரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் (28) உத்தரவிட்டது.

எனினும் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 17 நாட்கள் கடந்துவிட்ட போதிலும் இன்றுவரை அவர் தொடர்பான எந்த தகவலும் கிடைக்கவில்லை.

மாத்தறை நீதவான் நீதிமன்றம் முன்னாள் பொலிஸ்மா அதிபரை கைது செய்ய உத்தரவு பிறப்பித்த போதிலும், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கண்டவுடன் கைது செய்ய உத்தரவிட்டு, மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த 11 ஆம் திகதி திறந்த பிடியாணையை பிறப்பித்தது.

மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 10ஆம் திகதி ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான விசாரணையை மார்ச் 12ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதும், ரிட் மனு மீதான விசாரணையை 17ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

எனினும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை (17) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே தள்ளுபடி செய்திருந்தது.

இந்த நிலையில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் இன்று சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அடுத்த 8 அமர்வு.....**

ஏற்படுத்தும் வகையில் உள்ளன. இதற்கு நான் கடும் அதிருப்தியை வெளிப்படுத்துகிறேன்." - என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று சபாநாயகர் அறிவிப்புவேளையின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மார்ச் 20, 21, ஏப்ரல் 8, 9, 10, மே 6, 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரையை நேரடியாக ஒளிப்பரப்பு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உரையை அவர் சமூக வலைத்தளங்களில் பதிவிடக் கூடாது எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பயன்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய வார்த்தைகள் அனைத்தையும் ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறும் சபாநாயகர் உத்தரவிட்டார்.

மேற்படி காலப்பகுதியில் அவர் ஆற்றும் உரையில் தெரிவிக்கும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டே தடை நீக்கம் பற்றி தீர்மானிக்கப்படும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி தேர்தல்– கட்டுப்பணம் செலுத்தும் காலம் இன்றுடன் நிறைவு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் இன்று (19) நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளது.

தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது.

கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை காலம் மார்ச் 19 உடன் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டது.

அத்துடன் எக்காரணம் கொண்டும் இந்த இறுதி தினம் நீட்டிக்கப்படாது என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சரணடைந்த தென்னக்கோன்.....**

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேசபந்து தென்னக்கோன் இன்று காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை அவர் நீதிமன்ற சிறைக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து தேசபந்து தென்னக்கோனை நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



## கிருஷ்ணாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட யூடியூப் சனலை நடத்தும் கிருஷ்ணாவை எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி யூடியூபர் தான் உதவி செய்யும் காணொளிகளை வலையொளி பக்கத்தில் பதிவேற்றி வந்திருந்தார்.

இந்நிலையில், அவர் யாழ். பண்டத்தரிப்பில் உள்ள ஒரு வீட்டுக்கு இரவு வேளை சென்று அநாகரிமாக நடந்துகொண்ட காணொளி ஒன்று வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து அவர் அந்த வீட்டுக்கு மீண்டும் சென்றிருந்த வேளை இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைப்பட்டிருந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார் அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

கிருஷ்ணா தொடர்பான வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி வரை அவரைத்தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## தீர்வு கிடைக்கவில்லையாயின் நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும்- சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை!

2025ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக துணை வைத்திய நிபுணர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு நேற்று முதல் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் இன்று காலை 7 மணியுடன் நிறைவடைந்தது.

தமது பிரச்சினை தொடர்பில், நிதியமைச்சின் அதிகாரிகளுடன் மார்ச் 17ஆம் திகதி பேசித் தீர்க்க முற்பட்ட போதிலும் அதற்குரிய தீர்வு கிடைக்கவில்லை எனச் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தமது பிரச்சினைகளுக்குரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் சகல சுகாதார தொழிற்சங்கங்களையும் இணைத்துக்கொண்டு நாடளாவிய ரீதியில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜேர்மன் பெண்!



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜேர்மனியை சேர்ந்த பெண் ஒருவர் மாத்தளை மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

குறித்த பெண் இலங்கை குடியுரிமையைப்பெற்றுள்ளதாகவும், தேர்தலில் போட்டியிட தகுதி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

சுயேட்சைக் குழுவிலிருந்து கலேவல பிரதேச சபைக்கு வேட்பாளராக குறித்த பெண் போட்டியிடவுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்திய குறித்த ஜேர்மன் நாட்டு பெண் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, இலங்கையில் மாற்றங்களைக் கொண்டு வரும் நம்பிக்கையுடன் தான் போட்டியிடுவதாக குறிப்பிட்டார்.

## விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னகோன்!



மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 8 பேரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் (28) உத்தரவிட்டது.

இந்த நிலையில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், இன்று (19) காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார்.

இன்று (19) காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, நாளை (20) வரை விளக்கமறியலில் வைக்க, மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



## மிதி வெடி

*"பட்டு வேட்டி கனவில் மூழ்கியிருந்த போது, கட்டியிருந்த கோவணமும் பறி போனது" எண்ட நிலைமையாப் போச்சுது....*

*யாழ்ப்பாணத்துப் பெரிய பள்ளிக் கூடத்தில இண்டைக்குப் பட்டமளிப்பு விழாவாம். பட்டமளிப்பு விழா வருகுது எப்பிடியும் வேந்தரைப் போடத் தானே வேணும் எண்டு கனவில மிதந்த பெரிய ஆசிரியர் ஒருத்தருக்குப் பலமான அடியாம் பாருங்கோ....*

*நக்கிற நா**க்குச் செக்கென்ன, சிவலிங்கம் என்ன எண்டு சொல்லுமாப்போல கண்ட இடத்திலையும் கை அளை(லை)ஞ்சு திரியுறது படிச்சவைக்கு ஒண்டும் பாரதூரமான விசியமில்லைத் தானே பாருங்கோ. அரசியல் கட்சிகளிண்ட அலுவலகங்களுக்கும், தூதரகங்களிண்ட நிகழ்வுகளுக்கும் ஏன் தவறாமல் போகினம்... அங்கினேக்க ஏதாவது கிடக்கும் எண்டு தானே?*

*யாழ்ப்பாணத்தில துணைத்தூதரகம் வைச்சிருக்கிற இராஜதந்திரிகளோட நெருக்கம் போலக் காட்டிக் கொண்டு அவையளிண்ட நிகழ்வுகள் எல்லாத்திலயும் முன்னுக்கு இருந்து, குனிஞ்சு கும்பிடு போட்ட ஒருத்தர் திடீரெண்டு போன மாசம் இன்னொரு நாட்டு இராஜதந்திரிகளோட இரவு விருந்தொண்டில ஐக்கியமாகி இருக்கிறார்.*

*இரண்டு நாடுகளும் பரம வைரிகள். ஆப்படிக்கிறதில ஆளாளுக்குச் சளைச்சவை ஆருமில்ல.... கொஞ்ச நாளா "அந்த" நாட்டுத் தூதரகத்துக்கும், இங்க இருக்கிற பெரிய பள்ளிக்கூடத்துக்கும் கடும் தள்ளுமுள்ளு.... அங்கத்த தூதுவர் யாழ்ப்பாணம் வந்த போது பெரிய பள்ளிக்கூடத்துக்குள்ள போக முடியாமல் "பிரஸ்"காரர் நடத்திற "கிளப்"ல போய்த் தாறுமாறாக் கிழிச்சுப் போட்டுப் போனவர்.அந்தத் தூதுவர் அப்பிடிக் கதைச்சதுக்கு அடி எடுத்துக்குடுத்ததும் இந்த "வாழ்நாள்" தான் எண்டு பரவலாக் கதை அடிபடுகுது.*

*"குழம்பின குட்டையில மீன் பிடிக்கிறது" எண்டு சொல்லுவினம் அப்பிடித் தான் அந்த "ஐயா" வேலை பாத்திருக்கிறார். ஏற்கனவே பெரிய பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் தன்னைக் கணக்கெடுக்கிறாரில்ல எண்ட கடுப்பு ஒரு பக்கமிருக்க, பேரவையிலயோ... வேறெந்த அவையிலையோ தன்னைச் சேர்க்கவுமில்லை எண்டு நொந்து போயிருந்தவருக்கு... அந்தத் தூதரகம் கடுப்பாகியிருக்குது எண்டது வாய்ப்பாப் போயிற்று..*

*வழக்கம் போல, ஆரையோ பிடிச்சு அவையளை அணுகி பெரிய பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரைப் பற்றிப் போட்டுக் குடுத்ததுமில்லாமல், பொது வெளியில துவைச்சுத் தொங்கவிடவும் செய்திருக்கிறார். உள்ளுக்குள்ள நடந்ததொண்டும் அறியாத தூதரகமும், ஆழம் - நீளம் தெரியாமல் பொது வெளியில இல்லாதது, பொல்லாததை எல்லாம் அலட்டிப் போட்டுப் போயிற்றினம்.*

*"ஏத்திறவை ஏத்திவிடக் கேக்கிறவைக்கு என்ன மதி?" சொல்லுறவை ஏன் சொல்லுகினம்? சரி - பிழை எது எண்டு ஆராயாமல் அவையளும் "படிச்சவர்" பொய் சொல்ல மாட்டார் எண்டு நம்பி இருக்கினம்.*

*பூகோளப் போட்டியில எதிராளியா இருக்கிற நாட்டின்ர தாளத்துக்கு நாட்டியம் ஆடுற பெரிய பள்ளிக்கூடத்துக்கு நல்ல குடுவை எண்டு சந்தோசக் களிப்பில இருந்தவையிற்றப் போய், தன்னைத் தலைமை ஆசிரியர விடப் பெரிய இடத்தில இருத்த வேணும் எண்டு "ரெக்கமண்டேசன்" வேற கேட்டிருக்கிறாராம் போட்டுக்குடுத்த பெரிய ஆசிரியர்... அவையளும் "ஐயா" நல்லவர், வல்லவர் - நாலும் தெரிஞ்சவர் எண்டு ஒரு கடிதம் குடுத்ததாத் தகவல், ஆனா என்னால அதை உறுதிப்படுத்த முடியேல்ல.....*

*ஒரே கல்லில ரெண்டு மாங்காய் விழுத்தின சந்தோசத்தில - தலைமை ஆசிரியரைப் பழிவாங்கியாச்சு எண்டும், தன்னை அரசனாக்க வேணும் எண்டு "ரெக்கமண்டேசன்" குடுக்கப் பண்ணியாச்சு எண்டு புழுகத்தில இருந்த ஐயாவோ நான் தொலைபேசியில கதைச்சனான்....*

*"வாழ்த்துக்கள் ஐயா, விசேசம் எல்லாம் கேள்விப்பட்டன்" எண்டு சொன்னதுமே, மனுசனுக்குத் தலை, கால் புரியேல்ல அந்தளவுக்குச் சந்தோசம் பாருங்கோ.... "நீரும் கேள்விப்பட்டுட்டீர்,பேப்பர் காரரிட்டை ஒண்டையும் மறைக்கேலாது பாரும். என்ன விட்டா இங்க வேறை ஆர் இருக்கினம்... என்ர பேரும் இருக்குதாம்... எப்பிடியும் பட்டமளிப்புக்குள்ள வரும் எண்டு நினைக்கிறன்" எண்டார்.*

*இண்டைக்குப் பட்டமளிப்பு விழா.... வேந்தர் இல்லாமலே நடக்குது... வேந்தரா மேடையில இருக்கிறாதாக் கனவு கண்டவரை முன்னாலை விருந்தினர் பகுதியில கூடக் காணக் கிடைக்கேல்ல....*

*என்னத்தைச் சொல்ல... கட்டியிருந்த கோவணத்தைக் கூடக் காப்பாற்றத் தெரியாமல் பட்டுவேட்டிக் கனவில மிதந்தால் இப்பிடித் தான்...*

*வெளிநாட்டுத் தூதுவர் பதவி கிடைக்குமெண்டு தியேட்டருக்குத் திரிஞ்சவர், ஜனாதிபதித் தேர்தல் முடிஞ்சதுக்குப் பிறகு கண்டி றோட்டில போய்க் "காம்ப்" அடிச்சுக் கிடந்தவர்... இந்த நாட்டுத் தூதரகத்தோட திரிஞ்சுட்டு, அப்பிடியே "அந்தர் பெல்டி" அடிச்சு அந்த நாட்டுத் தூதரகத்திட்டப் பாஞ்சவர் எண்டதெல்லாம் மேல் மட்டத்துக்குத் தெரியாமல் இருக்குமே? பச்சை, நீலம் எண்டு மாறி மாறிப் பாஞ்சடிச்சவருக்குச் சிவப்புச் சட்டைக்காரர் நல்லாப் படிப்பிச்சிட்டினம் போல..?*

*ஆசைப்படுறதுக்கும் ஒரு அளவு வேணாமோ?*

*-நரமுனி-*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு வைபவம் ஆரம்பம்!

## நான்கு நாள்கள், 13 அமர்வுகளில் 3,920 பேருக்குப் பட்டங்கள்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் சற்று முன்னர் ஆரம்பமாகியது.

மரபார்ந்த பண்பாட்டு அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் பீடாதிபதிகள் அணிவகுத்து வர, கொடி, குடை, ஆலவட்டங்கள் சகிதம் விழா அரங்குக்கு வருகைதந்த துணைவேந்தர் அமர்வுகளுக்குத் தலைமை தாங்கிப் பட்டங்களையும், பரிசில்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை 13 அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் மூவாயிரத்து 920 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இம்முறை உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் வவுனியா வளாகத்தைச் (தற்போது வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்ளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 399 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 686 உள்வாரி மாணவர்களுக்கும், 702 திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 133 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 399 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை நான்கு மாணவர்களும், முது மெய்யியல்மாணிப் பட்டத்தை 11 மாணவர்களும், தமிழில் முதுமாணிப்பட்டத்தை 22 மாணவர்களும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தை மூன்று மாணவர்களும், கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப்பட்டத்தை 38 மாணவர்களும், தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை ஒரு மாணவரும், கல்வியியலில் முதுமாணிப்பட்டத்தை 176 மாணவர்களும், பொது நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டத்தை 70 மாணவர்களும், கல்வியில் பட்டப்பின் தகைமைச்



சான்றிதழை 54 மாணவர்களும், பிராந்தியத் திட்டமிடலில் முதுமாணிப்பட்டத்தை 17 மாணவர்களும், தமிழில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெறவிருப்பதுடன் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை இரண்டு மாணவர்களும் பெறுகின்றனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 147 மாணவர்கள் மருத்துவமாணி சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 177

மாணவர்கள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 110 மாணவர்கள் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 84 மாணவர்கள் பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 91 மாணவர்கள் உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், சித்தமருத்துவ பீடத்தில் இருந்து 60 மாணவர்கள் சித்த மருத்துவ சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தில் இருந்து மருந்தகவியல் சிறப்புமாணிப் பட்டத்தை 39 மாணவர்களும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 52 மாணவர்களும், தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 38 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 267 மாணவர்களும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 13 மாணவர்களும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 83 மாணவர்களும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை மூன்று மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 276 மாணவர்களும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 353 மாணவர்களும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 22 மாணவர்களும், சட்டமாணியில் சிறப்புப்






பட்டத்தை 69 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

மேலும், சேர். பொன் இராமநாதன் ஆற்றுகைகள், காண்பியக் கலைகள் பீடத்தைச் சேர்ந்த 158 மாணவர்கள் நடனம், இசை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் துறைகளில் நுண்கலைமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 30 மாணவர்கள் கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 57 மாணவர்கள் சுற்றுச் சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணிப் பட்டத்தை இரண்டு மாணவர்களும், தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை 106 மாணவர்களும், பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி பட்டத்தை 56 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

வியாபாரக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 57 மாணவர்கள் கணக்கியலும், நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 13 மாணவர்கள் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 32 மாணவர்கள் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 12 மாணவர்கள் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 34 மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணி (பொது)ப் பட்டத்தையும், 67 மாணவர்கள் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், ஒன்பது மாணவர்கள் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து 110 மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெறுகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் தொலைதூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 514 மாணவர்கள் கலைமாணி பட்டத்தையும், 76 மாணவர்கள் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும், 26 மாணவர்கள் வணிகமாணிப்பட்டத்தையும், 86 மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளதுடன், 90 மாணவர்கள் உடற்கல்வியில் உயர் தகமைச் சான்றிதழ்களையும், 37 மாணவர்கள் தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் உயர் தகமைச் சான்றிதழை ஒரு மாணவரும், வியாபார முகாமைத்துவத்தில் மூன்று மாணவர்கள் உயர் தகமைச் சான்றிதழ்களையும், வணிகத்தில் தகமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெற இருப்பதுடன், வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழை ஒரு மாணவரும் பெறுவது உறுதிப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 68 தங்கப் பதக்கங்களும், 57 பரிசில்களும், நான்கு புலமைப்பரிசில்களும், வழங்கப்படவுள்ளன.



# ஒரு மனதாக ஒன்றிணைவோமா?

ஆங்காங்கே தனித்தனியாக ஒரு தனி நபருக்கு நிகழும் பாலியல் மற்றும் இதர வன்கொடுமைகள் உண்மையில் ஒரு தனிநபரால் அல்லது சிலர் கூட்டாக இணைந்து ஒரு தனி நபருக்கு இழைக்கும் தீங்குதானா என்பது தான் முதல் கேள்வி? இதை இதே போன்றதொரு கண்ணோட்டத்தில் பார்த்துக் கொண்டிருந்தால் இதற்கு ஒரு முடிவே ஏற்படாது என்பதுதான் உண்மை.

சமீபமாக நடந்த சில சம்பவங்களிலிருந்து பின்னோக்கிப் போய் பார்க்கலாம்.

சீமான் எனும் ஒரு தனி நபருக்கும் விஜயலட்சுமி எனும் ஒரு பெண்ணுக்கும் இடையில் சில ஆண்டுகளாகவே நிகழ்ந்து வரும் கருத்து மோதல்களை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இது, இரண்டு தனிநபர் சார்ந்த சிக்கலை மிக முக்கியமான பேசுபொருளாக்கி, பேச வேண்டிய பிரச்சினைகள் திசை திருப்பப்படுத்தும் உத்தியாகவே இருக்கும்.

ஆனால் சில தினங்களுக்கு முன் சீமான் அவதூறாகப் பேசியது, விஜயலட்சுமி எனும் ஒரு தனிப் பெண்ணை பற்றி மட்டும்தானா? அவர் பேசிய அனைத்தும் பொதுவாக அனைத்துப் பெண்களின் மாண்பை இழிவுபடுத்தும் விதமாக இருந்ததா இல்லையா? ஆனால் அது பற்றி எந்தவிதக் கண்டனத்தையும் தெரிவிக்காமல் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், அவர்கள் இருவரையும் சமாதானமாகப் போகச் சொல்லி அறிவுறுத்தி இருப்பது ஏற்புடைய செயல்தானா?

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான ஒரு மூன்றரை வயது பெண் குழந்தையைப் பற்றித் தெரிவித்த கருத்து எந்த விதத்தில் சேரும்?

கொல்கத்தா மருத்துவருக்கு நிகழ்ந்த கொடூரமான பாலியல் வன்புணர்வுக் கொலை. அதனைத் தொடர்ந்து அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திருச்சி ஐஐடி போன்ற முக்கிய பல்கலைக்கழகங்களில் பெண் பிள்ளைகளுக்கு நடந்த பாலியல் வன்கொடுமைகள் போன்றவற்றை உற்று நோக்கும்போது இவையெல்லாம் ஒரு தனி நபர் மற்றொரு தனிநபருக்கு இழைத்த வன்கொடுமையாக மட்டுமே எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

அடுத்ததாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்த கொடூரச் சம்பவம். 13 வயது சிறுமியைப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய அந்த மூன்று பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தத் துணிவு எங்கிருந்து வந்தது?

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒன்றல்ல இரண்டல்ல, தினமும் இது போன்ற ஒரு செய்தியையாவது நாம் கட்டாயம் கடந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. இதே போன்ற நிலை நீடித்தால், பெண்பிள்ளைகளைக் கல்வி கற்கவும் பணிக்குச் செல்லவும் வெளியில் அனுப்பவே பெற்றோர்கள் அஞ்சும் நிலை உருவாகிவிடும். இப்பொழுதே அத்தகைய பாதுகாப்பற்ற சூழல் உருவாகிவிட்டது என்று கூடச்சொல்லலாம்.

பாலியல் குற்றச்சாட்டுகளில் பெண்கள் சொல்வது எல்லாமே உண்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிற கருத்தைக் கேரள உயர் நீதிமன்ற நீதிபதி முன் வைத்திருப்பதும், மைனர் பெண் குழந்தைகளின் கருக்கலைப்பு குறித்து மனுஸ்மிருதியை மேற்கோள் காட்டி குஜராத் உயர்நீதிமன்றப் பெண் நீதிபதி தன் கருத்தை வெளிப்படுத்தி இருப்பதும், நம் பெண்கள் சமுதாயம் எத்தகைய ஆபத்தான சூழ்நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நமக்கு அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

ஆங்காங்கே நடக்கும் ஒன்றிரண்டு முரணான சம்பவங்களை மையப்படுத்தி, பெண்கள் சொத்தில் பங்கு கேட்பதையும் மணமுறிவுக்குப் பிறகு பராமரிப்பு தொகை கேட்பதையும் குறை கூறத் தொடங்கி இருப்பது, ஆணாதிக்க வெறிக்குத் தீனி போடுவதாக இருக்கிறது. மணிப்பூர் பெண்களுக்கு, பில்கிஸ் பானோவுக்கு நடந்தது போன்ற சமூகக் குற்றங்களும், குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல், இலகு வாழ்க்கை வாழ்வதும் வெகு சகஜமாக நடக்கிறது.

தனக்கு நடந்த பாலியல் அத்து மீறலுக்கு, பிரிஜ் பூஷன் சிங்குக்கு ஆதரவாக இருக்கும் ஒன்றிய அரசாகத்தை எதிர்த்து மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்துடன் இணைந்து மல்யுத்த வீரர்கள் நடத்திய போராட்டத்துக்கு என்ன பலன் கிடைத்தது என்பதைத்தான் நாம் அறிவோமே!

கருக்கலைப்புக்கு அனுமதி மறுப்பு, ஆண், பெண் இருபாலர் மட்டுமே என்பது போன்ற அறமற்ற அமெரிக்க புதிய கொள்கைகள் இன்னும் அதிகமாகப் பெண்கள் மற்றும் பால் புதுமையினரின் உரிமைகளை நசுக்குவதாக இருக்கிறது. இதுவரை குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் அனைத்துமே நாம் அறிந்ததே!

இதுபோல, பெண்களுக்கு எதிராக தினமும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் வன்முறைகளைப் பட்டியலிட்டால் அது சீனப் பெருஞ்சுவர் போல நீண்டு கொண்டே போகும். ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்தால் அது குற்றச் செயல், இதுவே நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் தினம் தினம் தொடர்ந்து பரவலாக நடக்கின்றன என்றால் அது சமூகச் சீர்கேடு.

இவை எல்லாம் நேரடியாகப் பெண்களுக்கு நடந்தேறும் வன்முறைகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாகப் பெண்ணியக் கோட்பாடுகளுக்கு எதிராக நடந்து வரும் மறைமுகத் தாக்குதல். உள்ளூர் அரசியல் தொடங்கி உலக நாடுகள் வரை வலதுசாரி சித்தாந்தம் மேலோங்கி கிடப்பதே இதற்கு முக்கிய காரணம். வேலியே பயிரை மேயும் கதையாக, அரசாங்கமே இது போன்ற பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு மறைமுகமாக ஊக்கம் கொடுக்கிறது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இல்லாமல் போனால் பெரும்பான்மையான ஆண்களுக்கு இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட எப்படித் துணிவு வரும்?

குழந்தை திருமண ஒழிப்பு

பெண் கல்வி

பெண்களுக்கான வேலை வாய்ப்பு, சம ஊதியம்

சொத்துரிமை

மண முறிவு உரிமை

கருக்கலைப்புரிமை உள்படத் தங்கள் உடல் சார் உரிமைகள்

வாக்குரிமை

அதிகாரத்தில் பங்கு

உள்ளிட்ட பெண் உரிமைகளை இன்றைய பெண்கள் இலகுவாகவே அனுபவித்து வருவதால், இவற்றின் அருமை பலருக்குத் தெரியாமலேயே போய்விட்டது என்று சொல்லலாம். இவற்றையெல்லாம் நமக்குப் பெற்றுத் தர, நம் முந்தைய தலைமுறை பெண்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சம் இல்லை.

அகில இந்திய அளவில் இயங்கி வந்த பெண்ணுரிமை இயக்கங்கள், அவர்கள் ஒருங்கிணைத்து நடத்திய பெண்ணிய மாநாடுகள், அதற்கு அவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து கொடுத்த உழைப்பு போன்றவற்றை சற்றேனும் புரிந்துகொள்ள ஹெர் ஸ்டோரிஸ் மூலம் வெளிவந்திருக்கும் பெயரற்றவர்களின் குரல் புத்தகத்தின் ‘பெண்ணியம் ஓர் அரசியல்’ – மூத்த பெண்ணியலாளர் தோழர் வ.கீதா மற்றும் தோழர் நிவேதிதா லூயிஸ் இருவரின் உரையாடல் பகுதியை வாசித்தால் புரியும்.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் ? சர்வேசா ! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ ?

எனும் பாரதியின் வரிகளைப் போல, மிகவும் பாடுபட்டு நம் பெண்கள் வளர்த்தெடுத்த பெண்ணுரிமைப் பயிர் இன்று கருகிக் கொண்டிருக்கிறது.

முழுமூச்சுடன் இயங்கி வந்த பல பெண்ணிய இயக்கங்கள் இன்று பலமான ஆதரவு இல்லாமல் தளர்ந்து போய் கிடக்கின்றன. நலிந்து ஒலிக்கும் பெண்ணியச் செயற்பாட்டாளர்களின் குரல்கள் யார் காதிலுமே விழுவதில்லை. ஆதிக்க சக்திகளின் பேரிரைச்சல் அந்த மெல்லிய குரல்கள் யாருடைய செவியையும் எட்டாத அளவுக்கு அமிழ்த்தி விடுகிறது.

இவற்றையும் மீறித் துணிந்து சமூக வலைத்தளங்களில் வலுவான கருத்துக்களைப் பகிரும் பெண்களின் குரல் வளைகளும் ஆபாசக் கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் நெறிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தச் சமூகத்துக்கே சுயமரியாதை இருக்கக் கூடாது என்பதுதான் வர்ணாசிரமத்தின் பெயரால் இயங்கி வரும் சாதியக் கட்டமைப்பின் அடிப்படை. குறிப்பாகப் பெண்களுக்குச் சுயமரியாதை என்கிற உணர்வே இருக்கக் கூடாது என்பதுதான் ஆன்மீகப் போர்வை போர்த்திக் கொண்டிருக்கும் சாதிய நூல்களனைத்தும் போதிக்கும் தத்துவமே!

தங்கள் விரலைக் கொண்டே தங்கள் கண்களைக் குத்திக் கொள்ளச் செய்வது போல, பெண்ணியக் கோட்பாடுகளுக்கு எதிராகப் பெண்களையே தூண்டி விடுவதுதான் இந்தச் சாதீயஃபாசிசஃஆணாதிக்கஃவலதுசாரி சித்தாந்தத்தின் தந்திரம் எனலாம். கருத்தியல் மோதல்களை ஏற்படுத்தி, பிரிவினையை உண்டாக்கி, மக்களைத் தனித் தனித் தீவுகளாகப் பிரித்து வைப்பது, பாசிசத்தின் மற்றொரு குயுக்தி.

இத்தகைய வலுவான சாதியஃபாசிசஃஆணாதிக்கஃ வலதுசாரி சித்தாந்த ஆதிக்கத்துக்கு அடி பணிந்து, நலிந்துபோய் கிடந்த சமுதாயத்துக்குச் சுயமரியாதையைப் போதித்தவர் தந்தை பெரியார். பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்து, பெண்களைப் போராட்டக் களத்தில் நிறுத்தி, தங்களுக்காக தாங்களே போராட கற்றுக் கொடுத்தவர்.

அதனால்தான், ஆண்களுக்கு என்றில்லை ஆணாதிக்க சித்தாந்தத்துக்கு பலியாகிக் கிடக்கும் பல ஆதிக்கச் சாதிப் பெண்களுக்குமே தந்தை பெரியாரின் பெயரைக் கேட்டால் பற்றி எரிகிறது.

சுலபத்தில் யாரும் தங்களுடைய கட்டமைப்பை உடைத்துக் கொண்டு வெளியில் வந்து உண்மையான சமூக அக்கறையுடன் குரல் கொடுக்க தயாராகவே இல்லை. மறுத்து, முகநூலிலும் சமூக வலைத்தளங்களிலும் தங்களின் தற்குறித்தனமான கருத்துக்களைப் பரப்பி வருகின்றர். நாம் தினமும் பார்த்து, கடந்து போகும் ரீல்ஸ், ஷார்ட்ஸ் போன்றவற்றில் நகைச்சுவை என்கிற பெயரில் பெண்களைக் கொச்சைப்படுத்தி ஆண்கள் செய்யும் வீடியோக்களில் பெண்களே இயல்பாக நடிப்பதைக் கூடச் சொல்லலாம்.

காரணம் இவர்களுக்கெல்லாம் சுயமரியாதை பற்றிய தெளிவே இல்லை, இத்தகைய சமூக மாற்றத்துக்குப் பலரும் பழகிப்போய் அரமற்றுப் போயிருக்கின்றனர் என்பதுதான். பகுத்தறிவுப் பாதையில் பயணப்பட்டு சற்றே தலைநிமிர்ந்த பெண் சமுதாயம் இன்று மீண்டும் பழைய நிலைக்கு இழுக்கப்படுவது காலத்தின் கேடு. ஆணாதிக்கத்தில் பீடிக்கப்பட்டு பெண்கள் ஏன் இவ்வளவு பகுத்தறிவு மங்கிக் கிடக்கிறார்கள் என்றே புரியவில்லை. அல்லது நாம், உச்சியில் ஏறுவது போல இத்தகைய சிந்தனைகளைப் பலரிடமும் கொண்டு போய் சேர்க்கத் தவறுகிறோமா?

பெண்கள் எப்படி உடை அணிய வேண்டும் என்பதில் தொடங்கி, பெண்கள் எப்படித் தியாகிகளாக வாழ வேண்டும், அவர்கள் சொத்தில் பங்கு கேட்பது எத்தகைய தகாத செயல்? விவாகரத்து எவ்வளவு கொடும் பாதகம்! பராமரிப்பு தொகை கேட்பது எத்தகைய கொடுஞ்செயல், அந்தக் காலத்தில் குழந்தை திருமணம் செய்து கொண்டவர்கள் எத்தகைய உயர்வான வாழ்க்கையை வாழ்ந்தார்கள், அம்மியில் அரைத்து சட்னி செய்வதில் தொடங்கி வீட்டு வேலை செய்வதால் பெண்களில் உடல் நலம் எப்படிப் பராமரிக்கப்படுகிறது எனப் பற்பல விதமாகப் பெண்களுக்குக் கலாசாரத்தைப் போதிக்கும், யார் எழுதுகிறார்கள் என்பதே தெரியாமல், பலராலும் மறுபடி மறுபடி பகிரப்பட்டு எல்லோர் மூளையிலும் போய் அழுத்தமாக ஒட்டிக் கொண்டிருக்கும் பிற்போக்கு சிந்தனைகள் ஏராளம் ஏராளம்.

சமீபமாகச் சமூக வலைத்தளங்களில் ஏற்பட்ட பக்கெட் மா சர்ச்சை போன்று, ஒன்று போனால் மற்றொன்று என்று புதிது புதிதாகக் கிளப்பி விடுகிறார்கள். பலரும் இவற்றுக்கெல்லாம் எதிராகக் குரல் எழுப்பினாலும் வெட்ட வெட்ட முளைக்கும் காளான்களாய் இவை திரும்பத் திரும்ப முளைத்துக் கொண்டே இருக்கின்றன.

சமூக வலைத்தளங்கள் மூலமாக நீண்ட நெடுங்காலமாகக் கட்டமைக்கப்பட்ட, பெண்ணியக் கோட்பாடுகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் இத்தகைய மறைமுகப் போர்கள் பன்முகத்தன்மை கொண்டவையாகவே இருக்கின்றன.

இன்று, மும்மொழிக் கொள்கைக்கு எதிராக, நம் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்க நம் தமிழ்நாடு அரசாங்கத்தால் ஓங்கி ஒலிக்கும் எதிர்ப்புக் குரல், உலக அரங்கு எங்கிலும் எதிரொலிக்கிறது. அதேபோல பெண்களின் உரிமைகளுக்கும் நாம் பெரும் குரலை எழுப்பியே தீர வேண்டும்.

நமக்காகக் குரல் கொடுக்க மறுபடியும் தந்தை பெரியாரோ அல்லது பெரியார் போன்ற ஒருவரோ தோன்ற வாய்ப்பே இல்லை. எனவே நமக்கான குரலை நாம் தான் எழுப்ப வேண்டும். ஆணி வேர் வரை அழுகிப் போயிருக்கும் ஒரு செடியைத் துளிர்க்க வைப்பது எவ்வளவு கடினமோ அத்தகைய சவாலான ஒரு சூழ்நிலையை நாம் எதிர் கொண்டு இருக்கிறோம். இதிலிருந்து மீண்டு வர நம் பெண்கள் அனைவரும் பெரும் திரளாக ஒருங்கிணைந்து ஒரு மிகப்பெரிய அறப்போராட்டத்தை முன்னெடுத்தே ஆகவேண்டும்.

முதல் மொழிப்போரில் தந்தை பெரியார் எனும் ஒரு மந்திரக் கோலுக்குக் கட்டுப்பட்டுத் துணிந்து, குழந்தைகளுடன் பெண்கள் பலர் சிறை நிரப்பும் போராட்டம் செய்ததைத் தோழர் நிவேதிதாவின் 1938 முதல் மொழிப்போரில் பெண்கள் நூல் மூலம் அறிந்து கொண்டேன்.

இன்றைய நவீன யுகத்தில் அது போன்றதொரு கடினமான போராட்டத்தில் எல்லாம் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. தொலைதூரம் பயணம் செய்து, நாம் பெருந்திரளாய் ஒன்று கூடி சமூக அமைதிக்கு ஊறு விளைவிக்க வேண்டிய அவசியம் எதுவும் நமக்கு இல்லை. கொரோனா பேரிடரின் போது அவரவர் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு, விளக்கேற்றி மணி அடித்து, ‘கோ கொரோனா கோ’ என்று முழக்கமிட்டார்களே நினைவிருக்கிறதா?

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் இல்லாத கொரோனாவுக்கே தங்கள் வேண்டுதல் கேட்கும் என்ற நம்பி மக்களால் குரல் கொடுக்க முடியும் என்றால், இவை அனைத்தும் இருக்கும் நம் சமூகம் நம் குரலைச் செவிமடுக்காமலா போகும்?

உலகம் முழுவதும் உள்ள பெண்கள் பயன் பெறும் வகையில் பெரும் புரட்சி உதித்தால் மட்டுமே, இனி வரும் பெண் சந்ததிகள் நிம்மதியாகப் பொதுவெளியில் நடமாட முடியும். இன்றளவுக்கு தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்திலேயே இப்படி ஒரு புரட்சி சாத்தியம் என்றால், இன்றைய நவீன உலகில் எதுதான் சாத்தியம் இல்லை?

இனி, பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமைகள் என்றில்லை, சமூக வலைத்தளங்களில் பெண்களின் மாண்பைக் குலைக்கும் வகையில், பெண் உரிமைக் கோட்பாடுகளை சிதைக்கும் வகையில், ஓர் இடுகையோ, அல்லது சிறு பின்னூட்டமோ இடக்கூட மக்கள் விரோதத் தீய ஆதிக்க சக்திகளின் விரல்கள் நடுங்க வேண்டும். அதை சாத்தியப்படுத்தப் பேதங்களை மறந்து மகளிர் அனைவரும் ஒரு மனதாக ஒன்றிணைவோம்.

**கிருஷ்ணப்ரியா நாராயண்**







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2025 இல் வெளியிடப்பெற்றது.